**தலைப்பு 325 - இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 325 - இலங்கை கரையோக பாதுகாப்புத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 31 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 77.04 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 70.30 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 6.74 மில்லியன் அதாவது 8.75 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 39.27 | 37.81 | 1.46 | 3.72 |
| மூலதனம் | 37.77 | 32.49 | 5.28 | 13.98 |
| மொத்தம் | 77.04 | 70.30 | 6.74 | 8.75 |

## 2.2 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 6000/0000/00/0016/0118/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 0.62 மில்லியன் ஆகும்.

## 2.3 கணக்காய்வு அவதானிப்பு

இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாமை

2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றிக்கையின் பிரகாரம் இலங்கை கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தால் கணனி, மென்பொருள் மற்றும் உபபாகங்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.2.1 பாதீட்டு முரண்கள்

04 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாட்டில் 20 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.3.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதில் உள்ளடக்கப்பட்ட 10 செயற்பாடுகளுக்கிடையே ஒரு செயற்பாடு மாத்திரம் 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. திணைக்களத்தின் மூலதன வேலைக்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு நிதி ஏற்பாடு ரூபா 37.76 மில்லியனாக இருந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மூலதன வேலைகளின் பெறுமதி ரூபா 1,973.70 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகைகளுக்கான கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை திணைக்களத்தால் 2017 யூன் 16 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

2015 ஆம் அண்டின் போது செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதாக தீர்மானிக்கப்பட்ட 03 தொலைக்காட்சி இயந்திரங்கள், சமிக்ஞை இயந்திரமொன்று, 08 மின் விசிறிகள் என்பவற்றை உள்ளடக்கிய 15 இயந்திர உபகரணங்களை அகற்றுவதற்காக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 மனித வள முகாமைத்துவம்

திணைக்களத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் பிரத்தியேக பதவியணியொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு இலங்கை கடற்படையின் 69 உத்தியோகத்தர்களும், 1,118 கடற்படையினரும் இரண்டாம் நிலை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர்.